இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 247 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – சித்திரை 05 – சனிக்கிழமை 18 ஏப்ரல் 2026 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 247 : Thiruvalluvar Year - 2057 - Chithirai 05 - Saturday 18 April 2026 - Madurai 16 Pages ₹ 5.00

### இது ஒரு கருப்புச் சட்டம்! சூழ்ச்சியை உள்ளடக்கியது! எனவே ஒன்றிய பா.ஜ.க. அரசு

# தொகுதி மறுவரையறை திருத்தச் சட்டத்தை மொத்தமாக திரும்பப்பெற வேண்டும்!

## தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் மீண்டும் வலியுறுத்தல்!

**சென்னை, ஏப்.18-**

**தொகுதி மறுவரையறைச் சட்டத் திருத்தத்தை ஒன்றிய பா.ஜ.க. அரசு மொத்தமாகத் திரும்பப் பெற வேண்டும் என தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.**

இதுகுறித்து தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டர் பதிவில் கூறியிருப்பதாவது:-

தமிழ்நாட்டின் அரசியலுக்கு மிக முக்கியமான நாள் இன்று. தொகுதி மறுவரையறைக்கு எதிரான நம் போராட்டங்களின் முடிவினை அறியப் போகும் நாள்.

**பிரதமரின் சொல் ஒன்று செயல் வேறாக உள்ளது !**

நம்முடைய கடும் எதிர்ப்பினையும் போராட்டத்தினையும் தொடர்ந்து, தொகுதி மறுவரையறையால் தமிழ்நாட்டின் தொகுதி அளவு குறையாது என மாண்புமிகு பிரதமர் அவர்களும் உள்துறை அமைச்சர் அவர்களும் நேற்று நாடாளுமன்றத்தில் வாய்மொழி உத்தரவாதம் அளித்துள்ளனர்.



ஆனால், சொல் ஒன்று - செயல் வேறு என்பதாக, இவர்கள் தாக்கல் செய்துள்ள சட்டமுன்வடிவு முழுக்க முழுக்க ஏமாற்றுத் திட்டமாக இருக்கிறது. இதை நம்பவும் முடியாது, ஏற்றுக்கொள்ளவும் முடியாது எனத் திட்டவட்டமாக நிராகரிக்கிறோம்.

**கருப்புச் சட்டத்தின் சூழ்ச்சி!**

இந்தச் சட்டமுன்வடிவில் தொகுதி மறுசீரமைப்பு ஆணையத்துக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மூலம், இவர்கள் நினைத்தால் நினைத்த நேரத்தில், நினைத்த முறையில், எப்போது வேண்டுமானாலும் எதிர்காலத்தில், இவர்களுக்குச் சாதகமான வகையில், இந்திய மாநிலங்களின் தொகுதியளவை மாற்றியமைத்துக் கொள்வதற்கான வழிவகைகள் இந்தக் கருப்புச்சட்டத்தில் இடம்பெற்றுள்ளன. பெரும் சூழ்ச்சியை உள்ளடக்கியதாக இந்தச் சட்டமுன்வடிவு இருக்கிறது.

> **“நாம் கோருவது, முன்னாள் பிரதமர்கள் இந்திராகாந்தி அவர்களும், வாஜ்பாய் அவர்களும் அரசியலமைப்புச் சட்டத்திலேயே திருத்தம் செய்து, 25 ஆண்டுகளுக்குத் தொகுதி மறுசீரமைப்பை நிறுத்தி வைத்ததைப் போன்ற சட்டப் பாதுகாப்பு.”**

அவசரகதியில் இதனை நிறைவேற்றக் கூடாது. ஒன்றிய அரசு இதனை முழுவதுமாகத் திரும்பப் பெற வேண்டும். எண்ணிக்கை பலம் இருக்கிறது என்ற திமிரில், எங்களின் எதிர்ப்பை மீறி இதனை நிறைவேற்றினால், அதற்கான விளைவுகளைத் தமிழ்நாட்டில் நீங்கள் சந்திக்க வேண்டியிருக்கும்.

**ஒன்றிய ஆட்சியாளர்கள் மாநில உரிமைகளை நொறுக்கப் பார்க்கிறார்கள்!**

நேரு அவர்கள் இந்தியைத் திணிக்க மாட்டோம் என்றார், இருந்த வரை அந்த உறுதிமொழியைக் காப்பாற்றினார். ஆனால், தற்போதைய ஒன்றிய ஆட்சியாளர்களோ மாநில உரிமைகளைக் காப்பாற்றுவோம் எனச் சொல்லிக்கொண்டே அதனைச் சில்லு சில்லாக நொறுக்கும் வேலையில் ஈடுபடுகின்றனர்.

**தமிழ்நாட்டின் குரலுக்கு செவிசாய்த்தே ஆக வேண்டும்!**

நாம் கோருவது, முன்னாள் பிரதமர்கள் இந்திரா காந்தி அவர்களும், வாஜ்பாய் அவர்களும் அரசியலமைப்புச் சட்டத்திலேயே திருத்தம் செய்து, 25 ஆண்டுகளுக்குத் தொகுதி மறுசீரமைப்பை நிறுத்தி வைத்ததைப் போன்ற சட்டப் பாதுகாப்பு.



**Delimitation: Between Constitutional Statesmanship and Political Expediency**

- The proposed 131st Constitution Amendment Bill, 2026 delinks delimitation from the latest Census, and signals the discontinuance of the long-standing 1971 Census-based freeze, despite the enduring force of its rationale.
- With a sanctioned strength of 550, our Lok Sabha is already among the largest elected lower houses in the world. A House of 850 members would be unwieldy, with many MPs scarcely getting an opportunity to speak over a five-year term. It would erode meaningful debate, weaken committee effectiveness, and increase reliance on party whips and executive control.
- In the name of insulating delimitation from "political interference", the present design, in fact, privileges the Union government, which retains exclusive authority to appoint the Chairperson and members of the Delimitation Commission. The result is an unaccountable body whose decisions are final, largely non-justiciable, and effectively immune from correction.
- **The Union would do well to withdraw the 131st Constitution Amendment Bill, 2026,** along with the related legislation, and introduce a fresh Bill in the light of these concerns. Such a Bill should be placed in the public domain for at least three months, inviting wide, informed, and meaningful consultation.
- Delimitation is not a mechanical exercise in arithmetic, but an act of constitutional statesmanship. It must reconcile the equality of citizens with the dignity of States and preserve the delicate federal equilibrium of a diverse Union. The moment calls for reflection, not expediency; deliberation, not haste.

mkstalin 17.04.2026

**Withdraw Delimitation Bill;**

தமிழ்நாட்டின் குரலுக்கு ஒன்றிய பா.ஜ.க. அரசு செவிசாய்த்தே ஆக வேண்டும்!

இவ்வாறு தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

### பெண்களை கேடயமாக வைத்து, திட்டத்தைச் செயல்படுத்த மோடி அரசு முயற்சி!

# அரசியல் ஆதாயத்துக்கும், கூட்டாட்சியின் குரலை நெரிக்கவுமே தொகுதி மறுசீரமைப்பு!

## மக்களவையில் - நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி கடும் குற்றச்சாட்டு!

**புதுடெல்லி, ஏப்.18-**

**“கூட்டாட்சியின் குரலை நெரிக்கும் வகையிலும் - அரசியல் ஆதாயம் தேடுவதற்காகவுமே தொகுதி மறுவரையறை மசோதாவை ஒன்றிய பா.ஜ.க. அரசு தாக்கல் செய்துள்ளது” எனவும், “பெண்களை கேடயமாக வைத்து, இம்மசோதாவை நிறைவேற்றும் இத்திட்டத்தைச் செயல்படுத்த மோடி அரசு முயற்சிக்கிறது” எனவும் நாடாளுமன்ற கழகக்குழுத் தலைவர் - கனிமொழி கருணாநிதி மக்களவையில் பேசுகையில் கடுமையாக குற்றம் சாட்டினார்.**

நாடாளுமன்ற மக்களவையில் - கழக நாடாளுமன்றக்குழுத் தலைவரும் கழக துணைப் பொதுச்செயலாளருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள், தொகுதி மறுவரையறை மசோதா மீதான விவாதத்தில் ஆற்றிய உரை வருமாறு:-

நான் இன்று ஒரு நாடாளுமன்ற உறுப்பினராகவோ அல்லது திமுகவின் பிரதிநிதியாகவோ மட்டும் பேசவில்லை. தேர்தல் நேரத்தில் வாக்குரிமை பறிக்கப்படும் அச்சத்தில் இருக்கும் 8 கோடி தமிழ்நாட்டு மக்களின் குரலாக நிற்கிறேன். இந்த அவையில் விவாதம் நடக்கும்போதே, அவசரமாக மசோதாவை அறிவிக்கை செய்தது இந்த அவையை அவமதிக்கும் செயலாகும். தேர்தல்களைக் குலைக்கும் நோக்கில் கொண்டு





வரப்பட்டுள்ள இந்த மூன்று மசோதாக்களையும் எனது மாநிலத்தின் சார்பாகக் கடுமையாக எதிர்க்கிறேன்.

**தொகுதி மறுவரையறை என்பது வாக்குறுதியின் வரலாறு!**

பெண்களுக்கு இடஒதுக்கீடு அளிப்பது போன்ற போர்வையில் கொண்டு வரப்பட்டுள்ள இந்த மூன்று மசோதாக்களும், இந்தியக் கூட்டாட்சித் தத்துவத்தின் மீதான மிகப்பெரிய தாக்குதல் என்று கூறித் தொடங்குகிறேன். முதலிலிருந்தே தொடங்குகிறேன், ஏனெனில் பொதுமக்களுக்கு வரலாறு தெரியாது என்பதைத்தான் இந்த அரசு எப்போதும் நம்பியிருக்கிறது. இந்தியாவில் தொகுதி மறுவரையறை வரலாறு என்பது ஒரு வாக்குறுதியின் வரலாறு தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் தெலுங்கானா ஆகிய தென்னிந்திய மாநில மக்களுக்கு நாடாளுமன்றம் அளித்த வாக்குறுதி அது. பாரதிய ஜனதா கட்சியின் ஆதிக்கத்தை எதிர்த்து நின்று, உள்ளடக்கிய வளர்ச்சிக்கு முன்மாதிரியாகத் திகழும் ஐந்து மாநிலங்கள் இவை.

தொகுதி மறுவரையறை நடைமுறை 1952ல் குடியரசு உருவான உடனேயே தொடங்கியது. மக்கள் தொகை வளர்ச்சிக்கும் நியாயமான பிரதிநிதித்துவத்திற்கும் இடையே சமநிலையை ஏற்படுத்துவதற்கான அரசியலமைப்பு தீர்வாக இது அமைந்தது. நாம் அனைவரும் அரசியலமைப்பின் 82 மற்றும் 170வது பிரிவுகளின் பரிந்துரைகளுக்குக் கட்டுப்பட்டோம். 1973ல் மூன்றாவது தொகுதி மறுவரையறை ஆணையம் தனது பணியை முடித்தபோது, மக்கள் தொகைக் கட்டுப்பாட்டிற்கான அழுத்தம் இருந்தது. அதிகரித்து வரும் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த தேசிய மக்கள் தொகைக் கொள்கை நாடு முழுவதும் கொண்டு வரப்பட்டது, அதனால் 1976ல் தொகுதி மறுவரையறைக்கு முதல் முறையாகத் தடை விதிக்கப்பட்டது. இது 1971 மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் 25 ஆண்டுகளுக்கு நிர்ணயிக்கப்பட்டது.

**வாஜ்பாய் அரசு 24 ஆண்டுகளுக்கு நீடித்தது!**

1976ல் அம்மையார் இந்திரா காந்தி அரசு 42வது திருத்தத்தின் மூலம் மக்களவை இடங்களை 543க்கு மேல் உயராமல் தடுத்தது வெறும் தொழில்நுட்ப முடிவல்ல. அது தென்னிந்திய மாநிலங்களுக்கு அளிக்கப்பட்ட அரசியலமைப்பு வாக்குறுதி. மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தினால் அரசியல் பிரதிநிதித்துவம் குறையாது என்ற அந்த உறுதிமொழியை ஏற்று, தென்மாநிலங்கள் கல்வி மற்றும் சுகாதாரத்தில் முதலீடு செய்து மக்கள் தொகையைக் குறைத்தன. இந்த அநீதியைக் களைய வேண்டியதன் அவசியத்தை உணர்ந்துதான், 2001ல் வாஜ்பாய் அரசு 84வது திருத்தத்தின் மூலம் இந்தத் தடையை மேலும் 24 ஆண்டுகளுக்கு நீட்டித்தது. பாராட்டும் போது உங்களைப் பாராட்ட நாங்கள் என்றும் தயங்கியதில்லை.

இப்போது இடங்களின் எண்ணிக்கையை ஏன் 850 ஆக அதிகரிக்க வேண்டும்? எதன் அடிப்படையில்? மக்கள் தொகை அமைப்பில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாகக் குறிக்கோள் அறிக்கை கூறுகிறது, ஆனால் தொகுதி மறுவரையறை செய்ய 15 ஆண்டுகள் பழமையான 2011 மக்கள் தொகை கணக்கெடுப்புத் தரவை நீங்கள் பயன்படுத்துகிறீர்கள். உங்களை நீங்களே முரண்படுத்திக் கொள்கிறீர்கள். 850 இடங்கள் இருந்தால், பெரும்பாலான எம்.பி.க்களுக்கு ஐந்து ஆண்டுகளில் இந்த நாடாளுமன்றத்தில் பேசக் கூட வாய்ப்பு கிடைக்காது.

**தமிழ்நாட்டின் குடும்பத்திட்டம் குறித்து இந்த அரசு என்ன சொல்கிறது?**

தமிழ்நாட்டில் இரண்டு குழந்தைகளுடன் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்ட ஒவ்வொரு குடும்பமும் நாட்டின் நலனுக்காக அரசு சொன்னதை நம்பியது. இன்று தமிழ்நாட்டின் கருவுறுதல் விகிதம் 1.6 ஆக உள்ளது. இது ஆஸ்திரேலியா, பிரான்ஸ், உங்கள் நண்பர் அமெரிக்காவை விடக் குறைவு. மனித மேம்பாட்டின் ஒவ்வொரு அளவுகோலிலும் தமிழ்நாடு ஒரு வெற்றிக் கதையாகத் திகழ்கிறது, இதைக் கண்டு நாடு பெருமைப்பட வேண்டும். ஆனால் அந்தத் தமிழ்நாட்டுக் குடும்பத்திடம் இந்த அரசு என்ன சொல்கிறது? “மன்னிக்கவும், நீங்கள் தவறான முடிவை எடுத்துவிட்டீர்கள். இந்த நாட்டின் மீது அக்கறை கொண்டு எங்களை மதித்து நடந்ததற்காக நீங்கள் தண்டிக்கப்படுவீர்கள், உங்கள் பிரதிநிதித்துவத்தை நாங்கள் குறைக்கப் போகிறோம்” என்று சொல்கிறது.

1971லிருந்து உத்தரப் பிரதேச மக்கள் தொகை 120% அதிகரித்துள்ளது, ஆனால் தமிழ்நாடு 15% மட்டுமே அதிகரித்துள்ளது. மசோதாவின் பிரிவு 4, இடங்களின் ஒதுக்கீடு மக்கள் தொகை அடிப்படையிலேயே இருக்கும் எனத் தெளிவாகக் கூறுகிறது. ஆனால் உள்துறை அமைச்சரோ முரணான தகவலைத் தருகிறார். இப்போதைய கணக்கீட்டின்படி உ.பி 13 இடங்களைப் பெறுகிறது, தமிழ்நாடு 11 இடங்களை இழக்கிறது. இடங்களை அதிகரிப்பதன் மூலம் தமிழ்நாட்டிற்கு 59 இடங்கள் கிடைக்கும் எனச் சொல்வது ஏமாற்று வேலை. எங்களின் கொள்கை தலைவர் பெரியார் எங்களுக்குக் கற்பித்தது என்னவென்றால், நீதி என்பது ஒவ்வொருவருக்கும் ஒரே மாதிரியானதை வழங்குவது அல்ல. நீதி என்பது ஒவ்வொருவருக்கும் என்ன தேவையோ, எதற்கு அவர்கள் தகுதியானவர்களோ அதை வழங்குவது தான். கெடுவாய்ப்பாக, உங்கள் அரசாங்கம் தனக்கு என்ன தேவையோ அதுதான் முழு நாட்டிற்கும் தேவையானது என்று நினைக்கிறது.

**இந்த மசோதாவில் உள்ள சட்டச் சிக்கல்கள்!**

இந்த மசோதாவில் இரண்டு முக்கிய சட்டச் சிக்கல்கள் உள்ளன. முதலாவதாக, எந்த மக்கள் தொகை கணக்கெடுப்பைப் பயன்படுத்துவது என்பதைப் பெரும்பான்மை பலத்தைக் கொண்டு அரசே தீர்மானிக்கும் வகையில் மசோதா தெளிவற்றதாக உள்ளது. இரண்டாவதாக, தொகுதி மறுவரையறை ஆணையத்தை மாநிலங்களையோ அல்லது தலைமை நீதிபதியையோ கலந்தாலோசிக்காமல் ஒன்றிய அரசே

தொடர்ச்சி 3ஆம் பக்கம்